# ஓசை

காலாண்டு கவிதைச் சிற்றிதழ்

2011 – ஐப்பசி

குரல் : 06 இசை: 17

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
2011



கவிவானில் சிறகடிக்கும்
கவிக்குயில்களின் கானத்திற்கு
களமமைத்துக் கொடுக்கும்
ஓசையின் பதினேழாவது இதழ்
உங்கள் கரங்களில்...

கடந்து வந்த
ஆறாண்டு கால பகுதியில்
கசப்பான பல அனுபவங்களும்
களிப்பூட்டும் சில நிகழ்வுகளும்
ஓசைக்குக் கிடைத்த
அங்கீகாரமாகவே கருதி
ஆர்வத்துடன் தொடர்கின்றோம்.

ஆனாலும்
அடக்கப்பட்ட,
ஒடுக்கப்பட்ட மக்களின்
குரலாக ஒலிக்கும்
இலட்சிய பயணத்திற்கு
கவித்துவ வீச்சுடனான
கருத்தாழமிக்கக் கவிதைகளை
இன்னும்... இன்னும்...
அதிகம் எதிர்பார்க்கின்றோம்.

எதிர்காலத்திலாவது
எம் நோக்கம் நிறைவேற
உங்கள்
அக்கபூர்வமான கவிதைகளை
ஓசை
ஆவலுடன் எதிர்பார்த்துள்ளது.

ஆசிரியர்

கொழும்பு தமிழ்ச சங்கம்
நூலகம்

ஆசிரியர்: மூதூர் முகைதீன்

வெளியீடு: மூதூர் கலை இலக்கிய ஒன்றியம், நொக்ஸ் வீதி, மூதூர். 05

மனித நேயம் மண்ணில் மலர ஒலிக்கும் ஓசை

30/=

# அறிவூட்டும் ஆசான்கள்

## உலக ஆசிரியர் தினம் – ஒக்டோபர் 6

அகரம் முதலாய் அனைத்தையுமே
அழகாய் நாமும் அறிந்திடவே
பகரும் ஆசான் பணியினையே
பாரில் நாளும் போற்றிடுவாம்.

எண்ணும் எழுத்தும் எடுத்தோதி
என்றும் எமக்கு கல்வியினை
கண்ணும் கருத்தாய் கற்பித்து
கடமை புரியும் ஆசான்கள்.

வாழும் வழியை வையத்தில்
வாகாய் வழங்கி எமக்காக
நாளும் பொழுதும் உழைக்கின்ற
நாயகர் பணிக்கு ஈடுண்டோ.

பல்கலை பலவும் பயின்றிடவே
படியாய் இருந்து பாலகரை
வல்லவராக ஏற்றி என்றும்
வறுமையில் வாடும் ஆசான்கள்.


அன்பு பண்பு அறநெறிகள்
அமைவுறு வண்ணம் கவனமுடன்
கண்ணிய மாகக் கற்பித்து
கடமை புரியும் ஆசிரியர்.

அறிவு ஒன்றே அகிலத்தில்
அழியாச் செல்வம் என்பதனை
அறிந்தே அதனை மாணவர்க்கு
அழகாய் ஊட்டும் ஆசிரியர்.

**தொன்மையூர் கவிராயர்**

*குலம் அருள் தெய்வம்*
*கொள்கை மேன்மை*
*கலை பயில் தெளிவு கட்டுரை வன்மை*
*நிலம் மலை நிறைகோன்*
*மலர் நிகர் மாட்சியும்*
*உலகியல் அறிவோடு*
*உயர் குணம் இணையவும்*
*அமைபவனே நல்லாசான்.*

*(பவணந்திப் புலவர் – நன்னூல்)*



# மனதைக் கவர்ந்த உலகு

காமன் பெற்ற பேடு - அந்தக்
கன்னிக் கெதுவோ ஈடு
வாவென் றழைக்க வனப்பு - அவள்
வந்தாள் எனக்கும் இனிப்பு!

அறைக்குள் தனியே கிடப்பாள் - மலர்
அனைய அன்னவள் படுப்பாள்!
நிறைந்த மனதோடு நானும் - பல
நிமிடம் சுவைக்க வேணும்:-

பனியின் குளிரினால் மெத்தை - தனில்
படிப்போம் பின்பிடிப்போம் வித்தை
தனிமை இனிமை என்பாள் - தாகம்
தணிப்பாள் காத லன்பால்!

மாலையில் படலைப் பக்கம் - உனைக்
கண்டால் எனக்குச் சொர்க்கம்!
காலைக் கமலம்போல் இருப்பாய் - காதற்
கரங்கொண் டென்னை அணைப்பாள்!

கண்கள் இரண்டும் வண்டு! - அவள்
கன்னிப் பூவெனும் செண்டு - அவள்
மண்ணில் மலர்ந்த அழகு - என்
மனதைக் கவர்ந்த உலகு!

✷

**கிண்ணியா எம்.ரீ. சஜாத்**

# மனிதனின் ஆசைகள்

மனித இனத்தைப் படைக்கும்
முன்னரே படைக்கப்பட்டார்கள்
இறைவனால்
ஆதம் நபியும் ஹவ்வா நாயகியும்
இவர்களில் இருந்தே உதிததவர்களே
உலக மனித வர்க்கங்கள்
வரலாறு இவ்வாறு கூறினாலும்
இந்த ஆதத்தின் மகனும்
முதிர்ச்சியே அடைகின்றான்
மரணமுமாகின்றான்
மனிதனாகப் பிறந்த ஆதத்தின்
மகனுக்கோ
பேராசையும் விட்ட பாடில்லை
புதுப்புது ஆசைகளுக்கும்
குறைவே இல்லை
இவை இரண்டுக்கும் ஆசைகள்
திரும்பத்திரும்ப வந்து கொண்டே
இருக்கிறதே!
இந்த ஆதத்தின் மகனுக்கோ
தங்கப்பாத்திரமொன்று
கிடைத்திட்டால்
அதைப் போன்று இன்று மொன்றையே
எதிர்பார்க்கின்றான்
தற்செயலாக அதுவும் கிடைத்திட்டால்
இன்னு மொன்றைத்தரமாட்டானா
அந்த இறைவன் என்பான்
ஆதமின் மகனான
மனிதனின் ஆசைகளோ
உடல் மண்ணில் அடங்கி
போகும் வரைக்கும் திருப்தியே
அடைவதில்லையே!

எம்.எம் அலி அக்பர் - கிண்ணியா



# நக்கலடிப்பு

வாசலில் நட்ட ரோஜாவும் மனம்
பரப்பிட்டு
மனசுக்குள் வரைந்து கொண்ட
எதிர்காலத்திற்கான
ஓவியம் நிறம் தீட்டப்படாமலே
தொடர்ந்தலாகுது
பிடித்த வண்ணத்துப் பூச்சி
கையில் தந்து விட்டுப்பறந்த
பின்னான சகதிபோல் என் மீதான
கோபங்கள் ஒட்டிக்கொள்கின்றது.
தும்பியின் பறத்தலாய் வேகமாக
நகரும் காலம்
வயதையுடைத்தெறிந்து விட்டு
மௌனமாகவே நடக்கிறது.
யௌவனம் நக்கலடிப்பதான
நகர்வோடு
இப்படியாய் இடிபாடுக்குள்
சிக்கிய பொட்டுப் பூச்சி போல
தினம் தினம் குடும்பத்தாரின்
சினத்துக்குள் சிக்கிச்சாகுறேன்
என்னைப் போல இங்கு
நான் மட்டும்தானா?
ஆறுதலாகிவிடுகிற
நம்பிக்கையோடு...

# உறுத்தல்.........

மனம் வன்மப்பட்டுக் கொள்ளுது
நாளாந்த விடியலுக்குப்பின்னும்
கடத்துகின்ற பொழுதுகளை நாசுக்காக
வாப்பா பார்வையில் சினப்பதும்
உம்மா அதை புன்னகையால்
மறக்கடிப்பதும்
தொடர்ந்தலாயிற்று
படித்தல்கள் கூட வரவில்லை தெரியாத
இருத்தலில் தொங்கி
நிற்பதாய் உணர்ந்து சலிப்பதும்...
கனவுகளற்று உறங்குவதும்...
கண்ணீர் சிந்தாமல் அழுவதுமாய்
ஒருவளைவுக்கோடான – வாழ்தல்
நீடித்தல் எனக்கானது மட்டுமல்ல
இப்படித்தான் சிலர்
படித்தலின் சுமையோடும் வெறுப்பின்
அறுத்தலொடும்
அழைத்து திரிவதும் வாப்பாவின்
சம்பாதியத்திலான
குற்றவுணர்வுடனும் தலை குனிந்து
நட்பதுமாய்
ஒரு உறுத்தல் எனக்கு.

*ஜே பிரோஸ்கான்*

# உன் வரவுக்காய்

பிள்ளைகளை
படசாலைக்கு அனுப்பப் பயப்படும்
பெற்றோர்.

ஆபாசமான அர்த்தங்களை
மறைத்துப் பேசும் காமுகர்களாய்!....
சில
ஆசிரியர்கள்.
பள்ளிப்பருவத்தில்
கற்பையிழந்து கற்பினிளாய்.

பரிகாசிக்கப்படட்டும பர்தா ...
சிதைந்து போகும் கலாசாரமும்,
முக்காட்டுக்குள்
முறைகேடும், முரண்பாடுகளும்.

பருவகாலம் ...
விடுமுறையென்று....
உல்லாசமாய்,
சுற்றுலா செல்லும்
நம் சகோதர சகோதரிகள்.

"சுனாமி
மழை வெள்ளம்
புயல் வெயிலென்று...
தொடரும் சோதனைகள்.

மனிதம் புதைக்கப்பட்ட
மண்
மானுடம் உயர்ந்து விட்டதாய்...
பறையும் விஞ்ஞானமும் தொழில்
நுட்பமும்,
மௌனிகளாய்
புத்தி சீவிகள்.

விலங்குகளை விடவும் ...
கேவலமாய்
மானுடம்

கொலைகள் மலிந்த மலிந்த தேசத்தில்
வன்முறை....
வல்லுறவு.....
சிறுவர் துஷ்பிரயோகம்.

மகளை ! ....
விபசாரத்தில் ஈபடுத்தும்
நாய் காமலீலைகளில்
மதகுருமார்கள்.

அசிங்கமாய் அலையும்
இளசுகள்
கடற்கரைப்
பூங்கா
பட மா்ளிகை
விபச்சார விடுதிகளில்
மாணவிகள்
பிள்ளைகளைச் சீரழிக்கும்
கைத்தொலைபேசிகள்.

மனிதா
புன்னகைத்து
பூச்சாண்டி காட்டாதே
பூமி
காத்திருக்கிறது
உன் வரவுக்காய்.

மூதூர் ஜாபிர்

புல்லின் நுனியிலும்
புதுமை சிலிர்க்கும்
புல்லாங் குழலிலும்
புரட்சி வெடிக்கும்



# வீதிப்பூக்கள்



பாதையோரம்
பச்சை மண்ணை
இடுப்பிலிருத்தி
பரிதாமாய்
கரமேந்தும்
பிச்சை மலர்கள்....

ஏந்திய கரங்களும்
ஏங்கிய முகங்களும்
எதிர்காலம்
எடுத்தியம்பும் ....

ஒருபக்கம்
இறைந்திருக்கும் செல்வம்
மறுபக்கம்
இறந்திருக்கும் நெஞ்சம் ....

விலையுயர்ந்த
வண்டியிலிருப் போரின்
பரிதாபத்தில்
பசி தீர்த்திடும் வேகம்
அந்தப்
பார்வையில் தேங்கும் ....

மட்டமாய்
விரட்டப்படும் போது
ஏங்கிய விழிகளில்
கோபம்
தணலாய் எரிக்கும் ....

கந்தையாய்
அப்பிய சோகம்
கண்ணிலே தெரிய
கரமேந்தி
இறைஞ்சும்
வீதியோரப் பூக்கள் ....

**சுஸானா முனாஸ்**
பங்களாதேஷிலிருந்து

# எனக்குள் உறங்கும் நான்

கற்பனை வளர்த்தேன்
கனவுலகில் மிதந்தேன்
காரியம் கை கூட
கடும் பிரயத்தனம் எடுத்தேன்

ஆனால் நான் அடியெடுத்து வைக்கும்
பாதையெல்லாம்
துன்பமும் துயரமும் என்னைத்
துரத்திக் கொண்டே...

சாண்ஏற முழங்சறுக்கும்
சறுக்கு மர ஏற்றமாக
என் வாழ்க்கை அமைந்து விட்டது
ஓயாத போராட்டத்தின் மத்தியில்
உள்ளம் சோர்ந்து
உருக்குலைகின்றேன்...
எனக்குள் உறங்கும் நான்...!!

வெலிகம ரிம்ஸா முகம்மட்...

## எழுத்தாளர் பார்வை

கால் மாக்ஸ் பற்றி
கவிதை எழுதுவார்கள்
கள்ளச் சந்தையில்
எதையும் மெழுகுவார்கள்.

பரிசுகள் பெறுவதற்காக
கதிரைகள் மாற்றுவார்கள்
பட்டங்கள் சுமப்பதற்காக
விழாக்கள் நடத்துவார்கள்.

மீன்கள் பிடிக்காமல்
தூண்டில் போடுவார்கள்
தேன்கள் எடுக்காமல்
வண்டுகள் வளர்ப்பார்கள்.

இலக்கியப் பூக்களிள்
இலைகளை நெய்வார்கள்
இலட்சிய நாட்களின்
கொலைகளை மறைப்பார்கள்.

குலுக்கும் கைகளுக்குள்
குத்துவாள் வைத்திருப்பார்கள்
விளக்கையும் விட்டிலையும்
முகத்தில் தைத்திருப்பார்கள்.

*நல்லை அமிழ்தன்*

## நாளைய உலகம்

இன்று மானுட பிரச்சினை தீரவில்லை
மனிதாபிமானம் சிறையில் வாடுகிறது!
உரிமை கேட்டால் உதைதான்
கிடைக்கிறது
கடமை மறந்து அட்டகாசம் நர்த்தனம்
புரிகின்றது.
கல்வி - சமயம் - கலாசாரம்
பொருளாதாரம்
அரசியல் உரிமைகள் இன்னும்
எவர்க்கும் முற்றும் சுதந்திரமாய்
அனுபவிக்க முடியவில்லை!

நாளைய உலகம் வருமோ!
என்று கிழக்கை உற்று
நோக்குகின்றனர்!
ஆனால் நாளையும் அதே சூரியன்
நீட்டுகின்றான்...
அவனது கரங்களில் மானுட
உரிமைகள்
கிடைக்க வில்லை...
மாறாக புதுப்புது ஆயுதங்களே
தலை நீட்டுகின்றன!

நாளையை உலகத்தைக் கற்பனை
செய்து
கண்களை மூடும்
இரவுக் கைதி மானுட
விடுதலைக்காக
ஏங்கி நிற்கின்றான்!

*கலாபூஷணம் எம்.வை.எம் . மீஆத்*
*தும்புளுவாவை*



## சங்கடம்

வறுமை சங்கடம்
பொறுமை சங்கடம்
இளமை சங்கடம்
முதுமை சங்கடம்
ஒழுக்கம் சங்கடம்
ஓர்மம் சங்கடம்
நடுக்கம் சங்கடம்
நாக்கு சங்கடம்
உழைப்பு சங்கடம்
உண்மை சங்கடம்
களைப்பு சங்கடம்
கருணை சங்கடம்
திருமணம் சங்கடம்
திருமகன் சங்கடம்
மருமகள் சங்கடம்
மனைவி சங்கடம்
பிறப்பு சங்கடம்
பதைப்பு சங்கடம்
இறப்பு சங்கடம்
இல்லாமை சங்கடம்

**வித்யாசன்**

## எல்லோரும் பழிதீர்க்க

ஏன் பிறந்தேன்?
இந்த அவல நாட்டில்
என்பாதி வாழ்வை
பறித்தெடுத்து விட்ட யுத்தம்
மீதி வாழ்விலாவது
நிம்மதி கிடைக்குமென
கனவு காண
கண்ணுக்கு முன்
அரங்கேறும்
காட்சிகளை
பார்க்கையிலே
மீண்டும் ஒரு
பழி வாங்கல்
யுகத்தை நோக்கிய
பயண ஏற்பாடுகளா?
மனம் ஏங்க
மலருமா புதுவாழ்வு என்
குழந்தைக்கும்
தொடரும் தம்
பழி தீர்த்துக் கொள்ளும்
நிலையமாய் நம் வாழ்வு
இன்னமும்
வீதியில் அலைகிறது
விடுதலையின்றி.

*புலோலியூர் வேல்நந்தன்*

# சிறுவர் உலகம் ஒளிபெறவே

இளங் குயில்களின்
இனிமையான குரலினை
இரும்புக் கரங்களால் அடக்கி
இரக்கமிழந்த வார்த்தைகளால்
அர்ச்சனை செய்யும்
இதயத்தை இறக்கி வையுங்கள்!

இலவம் பஞ்சின் மென்மையாய்
இதமான அரவணைப்புடன் என்றும்
இனிமை சுகத்தை அனுபவிக்கும்
எங்கள் எதிர்பார்ப்பை
எப்போது நிறைவேற்றுவீர்கள் .....?

உறக்கத்தை உதறித் தள்ளி
உதயத்திற்காய் காத்திருக்கும்
உலக உயிரினங்களின்
உணர்வுகளை உற்றுப்பாருங்கள்.

தன் சிறகுக் கரங்களுக்குள்
சின்னஞ்சிறிய குஞ்சுகளை
சிறைப்படுத்திப் பாதுகாக்கும்
பறவைகளையும்....

அப்பிப் பிடித்த குட்டிகளுடன்
கொப்புகளிலே தாவிப்பாயும்
குரங்குக் கூட்டங்களின்
குறைவில்லாத அன்பையும்...

பசியுடன் ஓடிவரும் கன்றினை
களிப்புடன் அணைத்து
பாலூட்டும் பசுவின் பாசத்தையும்....

இப்படி
ஒவ்வொரு உயிரினங்களும்
தன் வருங்கால வாரிசுகளுக்கு
தன்னம்பிக்கையும் அன்பையும்
தாராளமாக வழங்கும்போது
நீ மட்டும்
மதிப்பளிக்க மறுப்பதேன்..?

சிட்டுக் குருவிகளாய்
சிறகடித்துப் பறக்கும் காலத்தில்
பாட்டும் படிப்பும் என
பவனி வரும் பருவத்தில்
வாட்டும் வறுமைக்குப் பழியாகி
காடுகளிலும்
கடை வீதிகளிலும்
பாடுபட்டுழைக்க வைக்கும்
பாவச் செயலை ஒழியுங்கள்.

அன்பையும் அறிவையும் ஊட்டி
ஆதரவு காட்டிட
அனைத்து கரங்களும் இணைந்து
வலிமைமிக்க எதிர்காலத்தை
எமக்காக
வழங்க முன்வரட்டும்.

இருளடைந்த
இன்றைய சிறுவர் உலகம்
ஒளிமயமான உதயத்தைக் காண
உரிமை கீதங்கள்
உலகெங்கும் ஓங்கி ஒலிக்கட்டும்

*பாத்திமா சுஜி*

# நெருப்பு

எதையாவது
எரித்த பிறகுதான்
நாங்கள் சாம்பலாகிறோம்...
எதையும் எரிக்காமல்
எதையும் பற்றாமல்
சிதைவதில் பயனென்ன
ஆம்,
எதையாவது எரித்த பிறகுதான்
நாங்கள் சாம்பலாகிறோம்.

*லதா பாரதி*
(நன்றி : தீபம் 1973 ஜனவரி)



# காதல் ஏக்கம்

எட்டி நின்று முத்தமிட
என்செய்தேன் ஆருயிரே
கட்டில் வரை வாராயோ
காதருகே பேசாயோ
விட்டில் பூச்சி போல்நீ
வீழ்ந்துவிட்டா லென்செய்வேன் என்
கட்டழகை நீ பருக
காதலனே என் அருகேவா"

"பட்ட மரம் துளிர்க் காதோ
பாவை யென் நினைவு பலிக்காதோ
தொட்டில் கட்டி நானாட்ட
துணையும் வர மாட்டாயோ
வட்டிலிலே பால் தருவேன்
வாழ்வளிக்க நீ வரவில்லையென்றால்
இட்டமுடன் என் உயிரை
இவ்வுலகில் நான் தரிக்கேன்"

" ஊரெல்லாம் பேச் சாச்சு
என்புருஷன் நீதான் என்று
யாரெல்லாம் கேலி செய்ய
யானென்ன செய்தேன் அத்தான்
சீரெல்லாம் நான்தர இந்த
சிற்றிடையால் என்னால் முடியாது
பாரெல்லாம் புகழ் பாட
பாவையென் கைப் பிடிக்கவா"

**சீ.என். துரைராஜா**
திருகோணமலை

# காதல் பொருத்தம்

அந்தி சாயும்
பொன்மாலைப் பொழுதில்
அழகிய கடற்கரை மணற்பரப்பில்
நானும் நண்பனுமாய்
கைகோர்த்து
நடை பயின்றோம் .....

கண்ணெதிரே
இளம் பெண்ணொருத்தி
முழு நிலவாய்
தெரிந்தாள் தன் தோழியுடன்
அவள் அந்த மணற்பரப்பில்
குந்தியிருந்தபடி
காகிதத்தில் ஏதேதோ
கிறுக்கிக் கெண்டிருந்தாள்...

தன் "தண்புனல்" பார்வையை
ஒரு கணம்
என் முகப்பரப்பிலே
தெறிக்கவிட்டாள்...
மெல்லியதாக
ஓர் புன்னகையையும்
உதிர்த்தி விட்டாள்
என் உள்ளத்து வெளியில்
உணர்வுகள்
துள்ளிக் குதித்தன
"என்னம்மா
எழுதுகிறாய்?" என்றேன்
.... சற்று வெட்கித்தவளாய்
ஆகா கவிதையா....
அற்புதம்....
"எங்களுக்கும் ஒரு கவிதை
எழுதித் தரலாமா?"
எனது பெயரே
"கவிதா" தான் என்று சொல்லி
தன்னையே
தருவதாக அவள்
தலையை அசைத்தாள்....
அவளுக்குப் பின்னர் தான்
தெரிந்தது
நானும் கவிதை
கிறுக்கத் தான்
கடற்கரைக்கு
வந்தேன் என்பது.

***கன்னிமுத்து வெல்லபதியான்***
*(சரவணமுத்து நவேந்திரன்)*
*பாண்டிருப்பு*

## நானழுத போது

**கானமுதக் குயிலழுதால்**
**கூவுதென்பார் கன்னி**
**வானழுத வேளையிலே**
**பொழியுதென்பார் மலர்**
**தேனழுதால் பிலிற்றுதென்பார்**
**ஏன்**
**நானழுத போதுமட்டும்**
**அழுகை யென்பார்?**

**கலியப் பெருமாள்**



# அதுவே வெற்றி

கொள்கைகளால் உலகத்தை
கவர்ந்து வாழ்ந்தோம்
கொடுமைகளை அறிவொளியால்
ஓட்டலானோம்.

செல்வழியில் முன்னேற்றம்
அதனைக் கண்டோம்
நல் வழியில் நற்றமலை
தன்னை ஏற்று
நானிலத்தை நமதாக்க வாரீர் வாரீர்.

இறை யொன்று மறை யொன்று
எங்கள் வாழ்வில்
இருக்கிறது உலகத்தை
வெல்லும் மாண்பு.

குறைவற்ற ஆட்சியதால்
குவலயத்தை
கொடி பறக்கச் செய்திடுவோம்
அஞ்சோம் அஞ்சோம்.

நிறைவுற்ற நெஞ்சுண்டு
நேய முண்டு
நேர்மை வழி சென்றிட்டால்
அதுவே வெற்றி.

*மூதூர் "கலைமேகம்"*

# இலக்குகள்

**இராத்திரிகளுக்கு**
**இடையூறு விளைவித்தது**
**கனவைக் கலைத்து விடும்**
**தொல்லை முழிப்புகள்.**

**கண்விழித்தால்**
**தீச்சுவாலைக்குள்**
**மிதிப்பதான உணர்வுகளுள்**
**உலகம்.**

**உயிருக்கு**
**உத்தரவாதமற்ற**
**வாழ்வுக்குறிப்புகள்**
**புனைகதைகளாக**
**சமுதாய வீதியில்**
**வலம் வரும்.**

**சிலந்தி வலைக்குள்**
**சிக்குண்ட கொசுவாய்**
**இலட்சிய இறகுகளை**
**கட்டி வைக்க முனையும்**
**மானுடத் தோழமைகள்.**

**உருவங்களுக்குள்**
**இலக்குகளைத் தேடியே**
**நல்லுணர்வுகளும்**
**களைப்படைந்தன.**

**இந்தப் பொழுதுகள்**
**ஏன் புலர வேண்டும்**
**நவீன யுகத்தில்**
**இரத்த ஆறுகளுக்கு**
**மேனிகளால்**
**அணைகட்டவா.**

**தேகப்பற்றுகளே**
**தேசப்பற்றுகளாய்**
**பழகிப்போன**
**மனித நேயங்களுள்**
**இலட்சிய விதைகள்**
**எங்கிருந்து முளைக்கும்.**

*மருதூர் ஜமால்தீன்*

# மர்ம மனிதர்கள்

இன்றைய நாட்களில்
மறைந்திருந்து
மங்கையரின் அங்கங்களை
பங்கப்படுத்தும்
மன்மதர்கள்.

தப்புக்களை தட்டிக் கேட்காமல்
தங்கள் பதவிகளை
தப்ப வைப்பதற்காக
தலையாட்டும் பொம்மைகளாய்
விலை போகும் தலைமைகள்.

அற்ப பிரச்சினைகளுக்கெல்லாம்
ஆலயங்களிலும்,
ஆலமரச் சந்திகளிலும்
ஆரவாரம் செய்து
அடிப்படைக் காரணங்களை
மூடி மறைக்கும்
முது கெலும்பில்லாத
இளைஞர்கள்

பணத்திற்கும் பதவிக்கும்
பல்லக்குத் தூக்கி
இனத்தை இழிவு படுத்தும்
ஈனச் செயல்களை
நியாயப்படுத்தும்
மக்கள் தலைவர்கள்

வாக்குப்பிச்சை கேட்டு
வாசல் தேடி வந்தோர்கள்
வசதியாய் வாழ
வாய்ப்பை வழங்கியவர்களே
இன்று
பிச்சைப் பாத்திரமேந்தி
அவர்கள்
பின்னால் அலையும் அவலம்

இவர்கள் எல்லோரும்
முகமூடி தரித்த முகவரியுடனே
எம் மண்ணில்
நிறைந்து வாழும்
மர்ம மனிதர்களே
முடியுமானால்
கண்டு பிடியுங்கள்

**மாவலி மைந்தன்**



*நிசார் கப்பானின் கவிதைகள்*

## பின்னடைவு நூலுக்கு எழுதிய குறிப்புகளிலிருந்து

நமது கவிதைகள் புளித்த விட்டன
பெண்களின் கூந்தலும் இரவுகளும்
திரைச் சீலைகளும்
சாய்வு நாற்காலிகளும்
புளிப்படைந்து விட்டன
எல்லாமே புளித்துப் போய்விட்டன.
துயருற்ற என்தேசமே
காதல் கவிதை எழுதும்
கவிஞானான என்னை
ஒரு நொடியில்
கத்தியினால் கவிதை எழுதும்
கவிஞனாக மாற்றினாய்.

சல்லடியும் புல்லாங்குழலும்
கொண்டு
நீ ஒரு யுத்ததை வெல்ல
முடியாது
எங்கள் அவசரதின் விலை
ஐம்பதாயிரம் புதிய கூடாரங்கள்.

சுவர்க்கம் உன்னைக் கைவிட்டால்
சுவர்க்கத்தைச் சபிக்காதே
சபிக்காதே சந்தர்ப்ப
சூழ்நிலைகளை
இறைவன் தான் விரும்புவோருக்கும்
வெற்றியைக் கொடுக்கிறான்
வாள் அடித்துத்தர
அவன் ஒரு கொல்லன் அல்ல.

காலையில் செய்திகளைக் கேட்பது
வேதனைக்குரியது
நாய்களின் குரைப்பைக் கேட்பது
வேதனைக்குரியது.

எங்கள் எதிரிகள்
எமது எல்லையைக் கடக்கவில்லை
எறும்புகள் போல எமது
பல வீனங்களுக் கூடாக
அவர்கள் ஊர்ந்து சென்றனர்.

ஐயாயிரம் ஆண்டுகள்
எமது குகைகளின் தாடிவளர்கின்றன
எமது நோட்டு அறியப்படாதது
எமது கண்களோ
ஈக்களின் சுவர்க்கமாயின.

நண்பர்களே
கதவுகளை உடையுங்கள்
உங்கள் மூளைகளைக் கழுவுங்கள்
உங்கள் ஆடைகளைக் கழுவுங்கள்.

தோழர்களே
ஒரு நூலை வாசியுங்கள்
ஒரு நூலை எழுதுங்கள்
சொற்களையும் மாதுழைகளையும்
முந்திரிகைகளையும் பயிரிடுங்கள்
பணிவிழும் தேசத்துக்குப்
பயணமாகுங்கள்
நீங்கள் குகைகளின் இருப்பது
யாருக்கும் தெரியாது
கலப்பன விலங்குகளாகவே
நீங்கள் கருதப்படுகிறீர்கள்.

தமிழில் - **எம்.ஏ. நு.்.மான்**
(நன்றி : சரிநிகர் செப் 1997)

ISSN-2012-8126

செக்கச்சிவந்த செங்கதிரோனும்
கிழக்கினில் வந்து விட்டான் - புற
மக்கள் மதிக் கண் விழித்துக் கிழம்பிட
வானில் உதித்து விட்டான்.

கத்தும் பறவை கனிமரத்தில் வந்து
ஒற்றுமை காட்டிடுதே – தலைப்
பித்ததம் பிடித்தொரு கூட்டம் தனித்தனிப்
பேதம் வளர்த்திடுதே – ரத்த
வேர்வைகள் சொட்ட உழைத்தவன்
நெற்றி சுருங்கிடுதே – ஏழை உத்தமர்
வாழ்வை உறிஞ்சும் உலுத்தரின்
கொட்டம் அடங்கிடுதே – மக்கள்
வெற்றி நெருங்கிடுதே.

**பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்**

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

Editor, Osai, Knox Road, Muthur.05

Designed & Printed By:
NIGHT CITY
MOBILE & PRINTERS
MARKET ROAD, MUTHUR.07
TEL: 026 223 8736.
077 283 4385.
075 498 2025.